# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 032/மா/2018**
**ஆணை நாள்: 07–12–2018**

டைம்ஸ் ஆப் இந்தியா 22.2.2018 நாளிட்ட நாளிதழ் செய்தி. – தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர் 15வது மண்டலம், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை. – **எதிர் மனுதாரர்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 15 ஒக்கியம்பேட் கால்வாய் துரைப்பாக்கம் பகுதியில் குப்பைகள் மற்றும் கட்டிட கழிவுகள் கொட்டப்பட்டு நீர்நிலைகள் சீர்கெட்டு வரும் அபாயம் உள்ளதாக 22.02.2018 தேதிய டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இச்செய்தியினை இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து முறையீட்டு மனுவாக பதிவு செய்து முறையீட்டு மனு எண். 032 / 2018 என எண்ணிடப்பட்டது. சம்மந்தப்பட்ட சென்னை மாநகராட்சி 15வது மண்டல அலுவலரிடம் அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சியின் 15வது மண்டலம் ஒக்கியம்பேட் கால்வாய், துரைப்பாக்கம் பகுதியில் குப்பைகள் மற்றும் கட்டிட கழிவுகள் கொட்டப்பட்டு நீர்நிலைகள் சீர்கெட்டுவரும் அபாயம் உள்ளதாக 22.02.2018 தேதிய டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இச்செய்தியில் தெரிவிக்கப்பட்ட புகார் குறித்து அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்க பெருநகர சென்னை மாநகராட்சி 15வது மண்டல அலுவலருக்கு 27.02.2018 தேதியிட்ட அறிவிப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி 15வது மண்டல அலுவலர் 22.11.2018 தேதியிட்ட தனது அறிக்கையில் பெருநகர சென்னை மாநகாட்சி 15வது மண்டலம், 195 ராஜீவ்காந்தி சாலையை ஒட்டிய பொதுப் பணித்துறை பராமரிப்பில் உள்ள ஒக்கியம் மடுவு கால்வாய் ஓரம் ஜெயின் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் கட்டிட கழிவுகள் கொட்டப்பட்டது என்றும் ஜெயின் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் கொட்டப்பட்ட கட்டிட கழிவுகளை அந்த நிறுவனம் மூலம் அகற்றப்பட்டது என்று தெரிவித்துளார். மேலும் இந்த ஒக்கியம் மடுவு பொது பணித்துறை பராமரிப்பில் உள்ளது என்றும், இனிவரும் காலங்களில் ஒக்கியம் கரையோரம் கழிவுகள் கொட்டாமல் இருக்க பொதுப்பணித்துறையின் மூலம் நடவடிக்கை மேற்க்கொள்ள உதவி செயற் பொறியாளர், பொதுப் பணித்துறை கீழடி பாலாறு கோட்டம், படப்பை காஞ்சீபுரம் மாவட்டம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கழிவுகள் அகற்றப்பட்டதற்றான புகைப்பட நகல் அனுப்பி வைத்துள்ளார்.

இந்நேர்வில் 22/02/2018 தேதியிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழில் தெரிவிக்கப்பட்டிருந்த புகார் சம்மந்தமாக, பெருநகர சென்னை மாநகராட்சி 15வது மண்டல அலுவலரின் அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டத்தில், டைம்ஸ் ஆப் இந்தியா 22/2/2018 நாளிதழில் தெரிவிக்கப்பட்டிருந்த புகார் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கழிவுகள் அகற்றப்பட்டுவிட்டபடியால் இம்முறையீட்டு மனு மீதான நடவடிக்கையினை கைவிடலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2018-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7-ஆம் நாள் அன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. மண்டல அலுவலர்,
15வது மண்டலம்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சோழிங்கநல்லூர்,
சென்னை – 600 119.

2. **உதவி செயற் பொறியாளர்,
பொதுப் பணித்துறை,
கீழடி, பாலாறு கோட்டம்,
படப்பை, காஞ்சிபுரம் மாவட்டம்,
சென்னை – 601 301.**